## முலடியன பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 24 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 29 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான முலடியன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடித்திருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 81,496 பெறுமதியான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 313,573 இற்கான கையிருப்புக்களின் பெறுமதி வகைப்படுத்தப்படாமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான 02 நிலையான வைப்புக்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 353,502 எனினும் நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டிய வட்டி ரூபா 900,196 என காட்டப்பட்டுள்ளமையால் வருமானம் ரூபா 546,694 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 726,480 இற்கான வட்டி வருமானம், வருமானப் பெறுவனவு என செலவு வைக்கப்படாமல் பெறவேண்டிய தொகை ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பதிவேடுகளின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 247,646 ஆக காணப்பட்டதுடன் பேரேட்டின் பிரகாரம் நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 210,220 என குறைவாகக் காட்டப்பட்டுள்ள தொகை ரூபா 37,426 ஆகும்.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,189,720 செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டிய தொகை ஒன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலுவை வருமானத்தின் கீழ் நிலுவை அனுமதிக் கட்டண மீதி ஒன்று காட்டப்பட்டிருக்கவில்லை. எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான அறவீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 11,300 இற்கான நிலுவையாக உள்ள அனுமதிப்பத்திரக் கட்டணம் மீதி ஒன்று காணப்பட்டது.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிய பெறுமதி ரூபா 2,867,183 ஆக காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 3,533,011 என காணப்பட்டமையால் ரூபா 665,828 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.5 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கு மீதி ரூபா 36,288 அவை தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டுள்ளது.

### 1.3.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,096,220 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 63,764,871 ஆகும்.

1.3.7 தீர்க்கப்படாத கணக்குகள்

-----------------------------------------

ரூபா 18,058 இற்கான 02 கணக்கு மீதிகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது தீர்க்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

1.3.8 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

ரூபா 177,277,732 பெறுமதியான 09 கணக்கு விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 5(12) | வழங்கப்பட்டுள்ள ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 168,705 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக விதியின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 7,225,252 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,464,683 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| ஏக்கர் வரி | 49 | 75 | 141 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 582 | 644 | 11 |
| ஏனைய வருமானங்கள் | 22,945 | 23,961 | 106,068 |

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவையாக இருந்த தொகை ரூபா 81,666 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில்போடப்பட்டவைகள் ரூபா 10,769 தொகையும் முன்னைய ஆண்டுக் கணக்கில் ரூபா 28,560 தொகையும் அறவிடப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் முறையே நூற்றிற்கு 48 மற்றும் நூற்றிற்கு 35 ஆகிய சிறிய பெறுமதியே காணப்பட்து.

(ஆ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணம் நிலுவையாக இருந்த தொகை ரூபா 11,800 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 500 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. எனவே அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 4 என்ற சிறிய பெறுமதியாகவே காணப்பட்டது.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 144,840 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

3.1.1 வீதி விளக்குகள் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கை 54 ஆக காணப்பட்டதுடன் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 376 விளக்கு தூண்களுக்காக 2013 ஆண்டின் போது உபகரணங்களுக்காக ரூபா 106,273வும் சம்பளமாக ரூபா 251,826 வும் ஆக கூட்டுத்தொகை ரூபா 358,101 செலவிடப்பட்டிருந்தது.

மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி வெளிச்சம் வழங்குதல் தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 07 திகதிய இலக்கம் PE/01/01 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் வீதி விளக்குகள் பொருத்தும் போது அதிகாரப் பிரதேசத்திலுள்ள வருடாந்த இல்லங்கள் மற்றும் மேந்தலை சில்லறை மின் நுகர்வின் நூற்றிற்கு 03 தொகையினை மிகைக்காது இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் அவ் விடயம் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

3.1.2 அங்கீகாரம் அற்ற நிர்மாண வேலைகள்

-----------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகாரம் அற்ற 11 நிர்மாண வேலைகள் தொடர்பாக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126(iii) இன் (உ)(ஊ) மற்றும் 126(ix) இல் குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132(ஏ) பிரிவின் பிரகாரம் சபையின் நலன்புரி கருமங்களுக்காக அல்லது சபை அலுவலர்களுக்கு ஏதேனும் இடர் நேரிடும் இடத்து அவர்களுக்கு உதவியொன்று வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட நிதியம் ஒன்றிற்கு சபையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் ஒரு தொகையினை வழங்க முடியும் எனவும் அப் பிரிவுக்கு மாற்றமாக கல்வி சுற்றுலா ஒன்று செல்வதற்காக ரூபா 119,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.3 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 02 | 01 | 01 | |
| இரண்டாம் தர | 25 | 25 | | |
| ஆரம்ப | 28 | 23 | 05 | |
| (அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 8 | | 08 |
| | 55 | 157 | 06 | 08 |

(i) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் அங்கத்தவர் படி ஆகியவற்றிற்காக ரூபா 11,024,900 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது சம்பளம் மற்றும் அங்கத்தகவர் படியாக ரூபா 14,012,142 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 2,987,242 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

(ii) திறைசேரி செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய முகாமைத்துவ சேவை சுற்று நிருப இலக்கம் 14 பிரகாரம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் 2103 ஆண்டின் போது 28 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 1,899,201 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்கு விடயத் தன்மை மற்றும் நல்லாட்சி

---------------------------------------------------------------------

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

------------------------------------------------------------------

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவியிருக்கவில்லை.

4.2 பாதீட்டு கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்